பாராளுமன்ற வெளியீட்டு மாலா இல :- **488**

நிறுவனத்தின் பெயர் :- **குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**

பாராளுமன்ற அரச நிதி சம்பந்தமான தெரிவுக்

குழுவினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை

சம்பந்தமாக

நிலையியற் கட்டளை இல 119(4) இன் கீழ் கௌரவ

அமைச்சரின்

அவதானிப்பு மற்றும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

சம்பந்தமாக பாரளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

இணைப்பு 01

அரசாங்கக் கணக்குகள் குழுவினால் (COPA) பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் (பாராளுமன்றத் தொடர் இல.488) தொடர்பான அவதானிப்புகள் மற்றும் தற்போதைய முன்னேற்றத்தை சமர்ப்பித்தல்

| தொ. இல | அறிக்கையின் மூலம் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகள் | குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை |
|---|---|---|
| 01 | **வருமானத்தை திரட்டு நிதியத்தில் வரவு வைத்தல்**<br><br>திணைக்களத்தின் நலன்புரி நிதியத்தை சட்டப்பூர்வமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்திய குழு, இந்த நிதியத்திற்கு வருமானம் கிடைக்கும் விதம் குறித்த விரிவான அறிக்கையொன்றை குழுவிற்கு வழங்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பிரதம கணக்கீட்டு உத்தயோகத்தருக்கு பரிந்துரைத்தது. | பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் இல.PS/IA/E&I/109/02/24 மற்றும் 2024.05.14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் ஏற்புடைய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 02 | **இலத்திரனியல் கடவுச்சீட்டு (e-passport) வழங்குதல்**<br><br>இலத்திரனியல் கடவுச்சீட்டுகளை (e-passport) வழங்குவது தொடர்பான தற்போதைய நிலைமை மற்றும் இந்தச் செயன்முறையை நிறைவு செய்வதற்கான காலப்பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய அறிக்கையொன்றை குழுவிற்கு வழங்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு குழு பரிந்துரைத்தது. | பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் இல.PS/IA/E&I/109/02/24 மற்றும் 2024.05.14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>கொள்முதல் வழிகாட்டுதல்களுக்கு இணங்க சர்வதேச போட்டி அடிப்படையிலான விலைமனுக்கள் கோரப்பட்டு 05 மில்லியன் இலத்திரனியல் கடவுச்சீட்டுகளை கொள்வனவு செய்யும் பணிகள் நிறைவடைந்துள்ளன. தற்போது திணைக்களத்திற்கு இலத்திரனியல் கடவுச்சீட்டு கையிருப்புகள் கிடைத்த வண்ணம் உள்ளன. தனிப்பயனாக்கத்திற்குத் (Personalization) தேவையான PKI கொள்வனவு செய்வதற்கும் சர்வதேச போட்டி அடிப்படையிலான விலை மனுக்கள் கோரப்பட்டு, ஒப்பந்தத்தை வழங்குவதற்கான பணிகள் இறுதி கட்டத்தில் உள்ளன. |
| 03 | **e-gates திட்டத்தை செயல்படுத்துவதில் தாமதம் ஏற்படல்**<br><br>விமான நிலையத்தில் ஏற்படும் நெரிசலைத் தவிர்ப்பதற்காக செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள e-gates திட்டம் தாமதமாவதற்கான காரணங்கள் மற்றும் திட்டத்தை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படும் காலப்பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய அறிக்கையொன்றை 2024 மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு வழங்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு பரிந்துரைத்தது.<br><br>அது தொடர்பான அறிக்கையின் பிரகாரம் | பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் இல.PS/IA/E&I/109/02/24 மற்றும் 2024.05.14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் ஏற்புடைய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>தற்போது, குடியகல்வுக்கான சர்வதேச அமைப்பின் (International Organization for Migration) நன்கொடையாக வருகைத்தரும் முனையத்தில் (Arrival Terminal) e-gates நிறுவப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, வெளியேறும் முனையத்திற்கும் (Departure Terminal) Airport nad Aviation Services Sri Lanka (AASL) நிறுவனத்தினால் e-gates வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| - | 2024.05.12 ஆம் திகதி கட்டுப்பாட்டாளர் நாயகம் மற்றும் சம்பந்தப்பட்ட தொழில்நுட்பக் குழுவினர் e-gates களை பரிசோதிப்பதற்காக (Factory Acceptance Test) கலந்துகொண்டதுடன், தாமதமின்றி இத்திட்டத்தை நிறைவு செய்ய முடியும் என அறிவித்துள்ளனர். | |
| 04 | **விமான நிலைய ஊழியர்களை வினைத்திறனுடன் சேவையில் ஈடுபடுத்தல்**<br><br>விமானப் பயணங்களின் கால அட்டவணையின் பிரகாரம் வேலைப்பளு அதிகமாக உள்ள நேரங்களில் கூடுதலான உத்தியோகத்தர்களை நியமிப்பது இன்றியமையாதது என வலியுறுத்திய குழு, பணி அட்டவணையை (Duty Roster) தயாரிக்கும் போது, தற்போது நடைமுறையில் உள்ளவாறு பகல் மற்றும் இரவு நேரப் பணிகளுக்கு சமமான ஊழியர்களை ஈடுபடுத்துவதற்குப் பதிலாக, விமான நிலைய ஊழியர்களை மிகவும் வினைத்திறனுடன் பயன்படுத்துவது குறித்து எடுக்கப்படும் நடவடிக்கைகள் அடங்கிய அறிக்கையொன்றை 2024 மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு வழங்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு பரிந்துரைத்தது.<br><br>அதற்கமைய, 24 மணித்தியால சேவை காலத்திற்கு குறைந்தபட்சம் 133 உத்தியோகத்தர்கள் தேவைப்பட்ட போதிலும், உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக அந்த எண்ணிக்கையை சேவையில் ஈடுபடுத்துவது நடைமுறை சாத்தியமற்றது என்றும், தற்போதுள்ள உத்தியோகத்தர்களை முகாமை செய்து பகல் நேரத்தை விட இரவு நேரப் பணிகளுக்கு அதிக எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. | பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் இல.PS/IA/E&I/109/02/24 மற்றும் 2024.05.14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் ஏற்புடைய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>2025 ஆம் ஆண்டில், மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 45 அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்களும் திறந்த அடிப்படையில் 64 அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்களும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.<br><br>இதற்கு இணையாக, 56 அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் பதில் கடமை அடிப்படையில் சிரேஷ்ட அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளனர். 2025 ஆம் ஆண்டில் 50 செயற்பாட்டு உதவியாளர்கள் இத்திணைக்களத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர்.<br><br>தற்போது விமான நிலையத்தில் கடமைக்காக மாதாந்த பணி அட்டவணையில் இருந்து ஒரு நாளைக்கு ஒதுக்கப்படும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது. விமான நிலைய கடமைகளுக்காக பணி அட்டவணையில் ஈடுபடுத்தப்படும் மொத்த அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை சுமார் 314 ஆகும். அதற்கமைய, ஒரு நாளைக்கு பணி அட்டவணையின்படி எழுமாறாக பகல் நேரப் பணிக்கு 55 அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்களும், இரவு நேரப் பணிக்கு சுமார் 70 உத்தியோகத்தர்களும் கடமையில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.<br><br>விமான நிலையத்தின் செயற்பாட்டுச் செயன்முறைகள் மற்றும் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள், செயற்பாட்டு உதவியாளர்கள் மற்றும் ஏனைய திணைக்களங்களில் இருந்து இணைப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் பணிகளை முறையாகக் மேற்பார்வை செய்வதற்காக, ஒரு பணி முறைக்கு (Shift) சுமார் 10 சிரேஷ்ட அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். விமான நிலைய பயணிகளை கையாளும் செயன்முறைக்கு உதவுவதற்காக ஒரு பணி முறைக்கு சுமார் 7 செயற்பாட்டு உதவியாளர்கள் சேவையில் |

| | | |
|---|---|---|
| | | ஈடுபடுத்தப்படுகின்றனர்.<br><br>தற்போது பயணிகள் நெரிசல் ஏற்படும் சந்தர்ப்பங்களில், நெரிசலை முறையாக முகாமை செய்து, பயணிகள் சேவை கருமபீடங்களை போதுமான அளவில் இயக்குவதற்குத் தேவையான எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்கள் நாளாந்தம் விமான நிலையக் கடமைகளுக்காக நியமிக்கப்படுகின்றனர். விமானப் பயண அட்டவணையை ஆய்வு செய்து, விமான நிலையப் பணிகள் பளுமிக்கதாக மாறும் போது, முறையான மேற்பார்வையை மேற்கொண்டு பயணிகள் நெரிசலைக் கட்டுப்படுத்த சிரேஷ்ட அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்கின்றனர். மேலும், பயணிகளை முறையாக குடிவரவு மற்றும் குடியகல்வு கருமபீடங்களுக்கு வழிநடத்துவதற்கும், பயணிகளுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கும் செயற்பாட்டு உதவியாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். |
| 05. | **Henley Passport Index தரவரிசை**<br><br>இந்த தரவரிசையின் ஒவ்வொரு அளவுகோல்களின்படியும், இலங்கையின் தற்போதைய நிலை மற்றும் நிலவும் நிலைமையை மேம்படுத்துவதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் அடங்கிய அறிக்கையொன்றை குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு குழு பரிந்துரைத்தது. | Henley Passport Index தரவரிசையில் இலங்கையின் தற்போதைய நிலைமையை மேம்படுத்துவது குறித்து எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் அடங்கிய அறிக்கையொன்று, அரசாங்கக் கணக்குகள் குழுவிற்கு அனுப்புவதற்காக, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் இல.DIE/IA/05/01/2024 மற்றும் 2024.12.18 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| 06. | பிராந்திய அலுவலகங்களின் நிலைமை கடவுச்சீட்டுகளை வழங்குவதற்காக நிறுவப்பட்டுள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் நிலைமை மிகவும் அதிருப்திகரமான மட்டத்தில் உள்ளதாக குழு குறிப்பிட்டது. | தற்போது கடவுச்சீட்டுகளுக்கு தட்டுப்பாடு நிலவவில்லை என்பதால், பிராந்திய அலுவலகங்களுக்கு கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு வருகைத்தரும் அனைத்து சேவைப் பெறுநர்களுக்கும் கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன. மேலும், கடந்த வருடத்தில் யாழ்ப்பாணத்தில் புதிய பிராந்திய அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளதால், வவுனியா அலுவலகத்தில் நிலவிய நெரிசல் குறைந்துள்ளது. அதேபோன்று, பிராந்திய அலுவலக்கங்களில் போதிய இடவசதி இல்லாமை ஒரு முக்கியப் பிரச்சினையாகும். மாத்தறை அலுவலகத்தை அதிக இடவசதி கொண்ட இடத்திற்கு மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கண்டி மற்றும் குருநாகல் அலுவலகங்களுக்கு புதிய அலுவலக வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

| | | |
|---|---|---|
| 07. | **வெளிநாட்டவர்கள் உள்நாட்டில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுதல்**<br><br>சுற்றுலா விசா (Visit Visa) மூலம் நாட்டில் தங்கியிருக்கும் வெளிநாட்டுப் பிரஜைகள் சட்டவிரோதமான முறையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக இலங்கையின் தென் மாகாணத்தை அண்டிய பகுதிகளில் இத்தகைய நடவடிக்கைகள் பெருமளவில் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டிய குழு, இவ்வாறான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியது. | சுற்றுலா விசா (Visit Visa) மூலம் நாட்டில் தங்கியிருக்கும் வெளிநாட்டு பிரஜைகள் சட்டவிரோதமான முறையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவது தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், இலங்கை பொலிஸாருடன் இணைந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், இவ்வாறு சட்டவிரோதமாக தங்கியிருந்த சுமார் 700 வெளிநாட்டவர்கள் மீண்டும் அவர்களது நாடுகளுக்கு திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 08. | **ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குதல்**<br><br>தற்போதைய ஊக்கத்தொகை திட்டம் குறித்த விபரங்கள் அடங்கிய அறிக்கையொன்றை 2024 மே 15 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு வழங்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பரிந்துரைத்தது. | பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் இல.PS/IA/E&I/109/02/24 மற்றும் 2024.05.14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குதல், தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் இல.EST-8/ALLOW/04/125/2 மற்றும் 2012.09.05 திகதிய கடிதத்தின் மூலம் தேசிய சம்பளம் மற்றும் பதவியணி ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு, நிபந்தனைகள் மற்றும் திருத்தப்பட்ட கொடுப்பனவுகள் குறித்து பொதுத் திறைசேரியின் இணக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உட்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.<br><br>அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விபரங்கள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றமின்றி, அதன் 02 ஆவது பந்தியில் உள்ள I, II, III மற்றும் IV நிபந்தனைகளை திருத்தி, 2025.03.25 திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் அட்டவணை II இன் சம்பளங்களை ஏற்புடையதாக்குவதற்கு தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் இல.EST-7/04/ALLOW/0125(iii) மற்றும் 2025.12.07 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தற்போது மேற்படி அனுமதியின் பிரகாரம் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. மேலும், நிலவும் ஊக்குவிப்புத் தொகை முறையை மீளாய்வு செய்வதற்காக ஏற்புடைய குழுக்களை நியமிப்பதற்குத் தேவையான அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 09. | **62 CCTV கேமராக்கள் 2017 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல்** | பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் இல.PS/IA/E&I/109/02/24 மற்றும் 2024.05.14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் |

| | | |
|---|---|---|
| | **களஞ்சியப்படுத்தப்பட்டிருத்தல்**<br><br>62 CCTV கேமராக்கள் 6 வருடங்களாக பயன்படுத்தப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பது குறித்து குழு தனது பலத்த அதிருப்தியை வெளியிட்டதுடன், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் தகவல் தொழில்நுட்ப பிரிவின் அதிகாரிகளை உள்ளடக்கிய குழுவொன்றை நியமித்து, இந்த கேமராக்களை பொருத்துவதற்கான திட்டமொன்றை தயாரிக்குமாறும், அத்திட்டத்தின்படி மேலும் தேவையான உபகரணங்கள் யாதென்பதைக் கண்டறிந்து, இக்கேமராக்களை பொருத்தி முடிக்கப்படும் காலப்பிரிவு அடங்கிய அறிக்கையொன்றை 2024 மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு வழங்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பரிந்துரைத்தது. | விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>ஏற்புடைய 62 CCTV கேமராக்களும் தற்போது திணைக்களத்திற்குள் பொருத்தப்பட்டு, செயற்பாட்டு மட்டத்தில் உள்ளன. |
| 10. | **வெற்று கடவுச்சீட்டுகளை ஒரே நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்தல்**<br><br>குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் கடந்த 21 வருடங்களாக எவ்வித விலைமனு கோரலுமின்றி ஒரே நிறுவனத்திடமிருந்து வெற்றுக் கடவுச்சீட்டுகளை பெற்று வந்துள்ளதாக குழு வெளிப்படுத்தியது. மேலும், வெற்றுக் கடவுச்சீட்டுகளின் தேவையை கருத்தில் கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்ட இக்கொள்வனவு, கடவுச்சீட்டு வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்திற்கும் ஒரு காரணமாக இருந்துள்ளது என்பதும் குழுவில் தெரியவந்தது. | கொள்முதல் வழிகாட்டுதல்களுக்கு இணங்க சர்வதேச போட்டி அடிப்படையில் விலைமனுக்களை கோரி, 05 மில்லியன் இலத்திரனியல் கடவுச்சீட்டுகளை கொள்வனவு செய்யும் பணிகள் நிறைவடைந்துள்ளன. அதற்கமைய, 2024 ஆம் ஆண்டு முதல் Thales DIS Finland Oy நிறுவனத்திடமிருந்து கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 11. | **கடவுச்சீட்டுக் கட்டண திருத்தம்**<br><br>2024 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் சாதாரண சேவையின் கீழ் வழங்கப்படும் கடவுச்சீட்டு கட்டணத்தை ரூ. 5000/= இல் இருந்து ரூ. 10000/= ஆக அதிகரிக்கும் போது, சட்டத்திற்கு இணங்க செயல்படாதது குறித்து குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. | எதிர்காலத்தில் தேவைப்படுமிடத்து, சட்ட விதிகளுக்கு இணங்க செயற்பட்டு, கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கான செலவுக்கு ஏற்ப கடவுச்சீட்டுக் கட்டண திருத்தத்தை மேற்கொள்வதற்கு ஏற்புடைய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| 12. | **சட்டவிரோதமாக நாட்டிற்குள் நுழைபவர்களை தடுத்து வைக்கும் இடங்கள்**<br><br>இதற்காக 100 பேருக்கான வசதிகளுடன் வெலிசறை பகுதியில் நிலையம் ஒன்று நடத்தப்பட்டு வருவதாகவும், ராகம பகுதியில் 2 ஏக்கர் காணி தற்போது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அங்கு சர்வதேச தரத்திற்கு ஏற்ப கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் குறிப்பிட்டார். | புதிய தடுப்பு முகாமை நிர்மாணிப்பது தொடர்பான திட்ட முன்மொழிவை பரிந்துரைத்து, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2026.03.31 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| 13. | **கட்டுநாயக்க விமான நிலையத்திற்குள் CCTV கேமராக்களை பொருத்துதல்** | பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் இல.PS/IA/E&I/109/02/24 மற்றும் 2024.05.14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அது |

| | | |
|---|---|---|
| | கட்டுநாயக்க விமான நிலைய முனையத்தில் பயணிகளின் விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கருமபீடங்களில் பொருத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள CCTV கேமரா கட்டமைப்பு பற்றிய விபரங்கள் அடங்கிய அறிக்கையொன்றை 2024 மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு வழங்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பரிந்துரைத்தது. | தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>கட்டுநாயக்க விமான நிலைய முனையத்தின் அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுவதால், பயணிகளின் விபரங்களைப் பெறுவதற்கான CCTV கேமராக்களை பொருத்தும் பணிகளை அந்த அதிகார சபையே மேற்கொள்கின்றது. |

**இணைப்பு 02**

**அரசாங்கக் கணக்குகள் குழுவினால் (COPA) பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் (பாராளுமன்றத் தொடர் இல. 492) தொடர்பான அவதானிப்புகள் மற்றும் தற்போதைய முன்னேற்றத்தை சமர்ப்பித்தல்**

| தொ. இல | அறிக்கையின் மூலம் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகள் / குறைப்பாடுகள் | குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை |
|---|---|---|
| 1. | **முதலாம் பகுதி : 90.00**<br><br>கணக்காய்வாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து கணக்காய்வு வினவல்களுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்படவில்லை. அனைத்து வாகனங்களிலும் அரசாங்க இலச்சினை பதிக்கப்பட்டிருக்கவில்லை. ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன் மீதிகள் காணப்பட்டன. ஊழியர்கள் அனைவருக்கும் எழுத்துமூலம் கடமைப் பட்டியல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த காலங்களில் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நிலவிய அதிகரித்த கேள்வி காரணமாக, அது தொடர்பான பணிகளை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டியிருந்தது. எதிர்காலத்தில் கணக்காய்வாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு கணக்காய்வு வினவலுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது குழும வாகனங்களுக்கு அரசாங்க இலச்சினை மற்றும் திணைக்களத்தின் பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகைகள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையிலுள்ள கடன் மீதிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், ஊழியர்கள் அனைவருக்கும் எழுத்துமூலம் கடமைகளை ஒதுக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 2. | **இரண்டாம் பகுதி : 74.00**<br><br>2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க, முறையாக தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் தகைமைக்கு உட்பட்ட மட்டத்தில் / எதிர்மறையான மட்டத்தில் அதிருப்தியான மட்டத்தில் காணப்பட்டது. அனைத்து உத்தியோகத்தர்களினதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மனிதவளத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. நிறுவனத்தின் கணக்குகள் குறித்து 2025 ஆம் ஆண்டில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து உத்தியோகத்தர்களினதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |